# 02-09-2023 செய்தி

## உலகளாவிய தரவரிசை; ஆர்பிஐ ஆளுநருக்கு முதலிடம்

- உலக அளவில் சிறந்த மத்திய வங்கித் தலைவர்களின் பட்டியலில் இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) ஆளுநர் சக்திகாந்த தாஸ் முதலிடம் பெற்றுள்ளார்.
- பணவீக்கத்ததைக் கட்டுப்படுத்துதல், பொருளாதார வளர்ச்சி இலக்குகள், செலாவணி பிறத்தன்மை, வட்டிவிகித மேலாண்மை உள்ளிட்ட நடவடிக்கைகளில், தங்களது உத்திகளின் மூலம் அடைந்த வெற்றியின் அடிப்படையில் மத்திய வங்கித் தலைவர்கள் தரவரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## இந்தியாவில் 74% பேருக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவில்லை

- உலகின் 5-ஆவது மிகப்பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உருவெடுத்துள்ளது.
- அதே வேளையில், நாட்டில் உள்ள 74 சதவீத மக்களுக்கு ஆரோக்கியமான உணவு கிடைக்கவில்லை என உலக வங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- நாட்டின் பல்வேறு நகரங்களில் ஆரோக்கியமான உணவுக்கான விலையும் அதிக அளவில் அதிகரித்துள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
- முக்கியமாக, மும்பையில் கடந்த 5 ஆண்டுகளில் உணவுப் பொருள்களின் விலை 65 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும். ஆனால் ஊதியம் 28 முதல் 37 சதவீதம் வரை மட்டுமே அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஒரு நாளுக்கு ஒரு நபருக்கு**
**(அமெரிக்க டாலரில்)**

| | | | |
|---|---|---|---|
| பூடான் | 5.3 | நேபாளம் | 4.6 |
| தென்னாப்பிரிக்கா | 4.4 | இலங்கை | 4.2 |
| ஈரான் | 4.1 | பாகிஸ்தான் | 3.8 |
| எத்தியோப்பியா | 3.7 | ரஷியா | 3.6 |
| எகிப்து | 3.5 | பிரேஸில் | 3.4 |
| ஐக்கிய அரபு அமீரகம் | 3.3 | வங்கதேசம் | 3.2 |
| இந்தியா | 3.07 | | |

## தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் சிங்கப்பூர் அதிபராகிறார்

**தர்மன் சண்முகரத்னம் யார்?**

- சிங்கப்பூர் அதிபர் தேர்தலில் போட்டியிடும் தர்மன் சண்முகரத்னம் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவர் ஆவார்
- இலங்கையை பூர்விகமாகக் கொண்ட அவர் கடந்த 2001ம் ஆண்டு சிங்கப்பூரின் ஜுரோங் தொகுதியில் இருந்து எம்பியாக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- சிங்கப்பூர் நாணய வாரியத்தின் தலைவர், பிரதமரின் ஆலோசகர், நிதியமைச்சர், கல்வி அமைச்சர், துணை பிரதமர் என பல்வேறு பதவிகளை வகித்துள்ளார்.
- சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் அறங்காவலர் வாரிய தலைவராகவும் பதவி வகிக்கிறார்.
- தமிழ் வம்சாவளியை சேர்ந்த தர்மன் சண்முகசுந்தரம் ஆளும் மக்கள் செயல் கட்சியின் ஆதரவு பெற்றவர் ஆவார்.

## ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தின் பலன்கள் என்ன?

**பலன்கள்**

- கடந்த 2019 மக்களவை தேர்தலில் மட்டும் சுமார் ரூ.60,000 கோடி செலவிடப்பட்டுள்ளதாக ஒரு புள்ளிவரம் கூறுகிறது. இதில் மத்திய அரசின் செலவுடன் அரசியல் கட்சிகளின் செலவும் அடங்கும்.
- இதில் சட்டப்பேரவை தேர்தல்களையும் சேர்த்தால் , தேர்தல் செலவு மேலும் பல ஆயரம் கோடியை தாண்டும். இந்த செலவுத் தொகையில் பெரும்பகுதி இந்தியாவுக்கு மிச்சமாகும்.
- ஒவ்வொரு தேர்தலின் போதும் அரசியல் கட்சிகளின் பிரச்சாரங்களால் கல்வி பயிலும் மாணவர்கள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு ஏற்படும் தொல்லைகள் தவிர்க்கப்படும்.
- மத்திய, மாநில அரசுகளின் நிர்வாகத்திற்கு ஏற்படும் பல்வேறு சிரமங்களும் குறையும். அதிகாரிகள் தங்கள் வழக்கமான பணிகளில் கவனம் செலுத்தலாம்.
- இதன் பலன் பொதுமக்களுக்கு வந்து சேரும். தேர்தல் எனும் பெயரில் பொது மக்களுக்கு நிறுத்தி வைக்கப்படும் பல சேவைகள் தொடரும்.
- மத்திய பாதுகாப்பு படைகள் மற்றும் மாநில காவல் துறைகளின் உழைப்பு விரயமாவது தவிர்க்கப்படும். மாநில மற்றும் பிராந்திய அளவிலான பிரச்சினைகளை விட தேசிய அளவிலான பிரச்சினைகள் புதிய தேர்தல் முறையில் ஓங்கி நிற்கும், பொதுமக்களுக்கும் தேசிய உணர்வு அதிகரிக்கும்.

**இழப்புகள்**

- ஒரே நாடு ஒரே தேர்தல் முறையில் சட்டப்பேரவையை விட மக்களவைக்கு அதிக முக்கியத்துவம் கிடைக்கும் வாய்ப்புகள் உள்ளன.
- இந்த முறையால், மாநில மற்றும் பிராந்தியக் கட்சிகளுக்கான முக்கியத்துவம் பின்னுக்கு தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
- இந்தமுறை தேர்தலை இது வரை இல்லாத அளவில் பல கட்டங்களாக நடத்தவேண்டி வரும். ஏனெனில் மத்திய பாதுகாப்பு படைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் இடம் மாற்றி பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது.
- நாட்டில் கடந்த காலங்களில் இதுபோல் ஒரே நேரத்தில் இரு தேர்தல்களும் நடந்துள்ளன. ஆனால் அப்போது மக்கள் தொகையும் பாதுகாப்பு பிரச்சினைகளும் குறைவாக இருந்தன.